(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1 (1).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2010, மே 21, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2010, யூன் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0085 / '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லுனாவ அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பில் அப்பகுதி மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கான "சந்தசிறி விக்கிரம ஆரச்சி தனிநபர் குழு" எத்திகதியில் நியமிக்கப்பட்டது என்பதையும் ,

(ii) மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்,

(iii) மேற்படி குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் அதன் சாராம்சம் யாதென்பதையும்,

(iv) சம்பந்தப்பட்ட அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டா என்பதையும்,

(v) இற்றை வரை மேற்படி அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கா மைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0088 / '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் சட்டரீதியான அனுமதியின்றி ஆயுதம் ஏந்திய நபர்கள் இருக்கின்றனரா என்பதையும்,

(ii) சிவில் பாதுகாப்பு, பொலிஸ், முப்படை தவிர்ந்த வேறு ஆட்களுக்கு ஆயுதம் ஏந்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0056/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்காலை கல்வி வலயத்திற்குட்பட்ட அங்குணுகொலபெலஸ்ஸ கோட்டக்கல்வி காரியாலயத்தினால் மேற்பார்வை செய்யப்படும் தஹஅமுண மற்றும் ஹுன்னகும்புர ஆகிய ஆரம்ப பாடசாலைகள் 03 ஆண்டு காலமாக மூடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இரண்டு பாடசாலைகளைக் கொண்டு நடத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தின் தற்போதைய பெறுமதி எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைக் கட்டடங்கள் அழிவடைந்தால் அந்த இழப்பை ஏற்பது யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இக்கட்டடங்களை வேறொரு கருமத்திற்காகப் பயன்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா,

(ii) மேற்படி கட்டடங்களைப் புனரமைத்து பயன்பாட்டிற்கு எடுக்காவிடின், வேறு நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக கட்டடங்களையும் நிலத்தையும் விடுவிக்க உடன்படுகிறீர்களா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0057/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர், கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அணுகம்வெஹர பிரதேச செயலாளர் பிரிவின் பராக்கிரமபுர கிராம உத்தியோகத்தர் பிரிவின் கு.க. 03 அல்லகல புகுமுக வீதியின் 200 மீற்றர் தற்போது கொங்கிறீட் கழன்று வெடிப்புக்குள்ளாகி, பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணிப்புக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமனங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டமைக்கான விதப்புரைகள் தொழிநுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) அவ்வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வீதியை நிர்மாணிப்பது குறித்து முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0051/ ‘10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குடும்ப வன்முறைச் சட்டத்தின் கீழான இடைக்காலக் கட்டளைகள், அகற்றப்படுவதற்கு அல்லது இறுதிக் கட்டளையாக மாற்றப்படுவதற்கு முன்னர், தொடர்ந்து செல்லுபடியாகக்கூடிய அதிகபட்ச கால அளவினையும்,

(ii) சட்டத்தில் இத்தேவைப்பாடு புறக்கணிக்கப்படக்கூடியதா என்பதையும்,

(iii) கடந்த இரண்டு வருட காலத்தில் இந்தத் தேவைப்பாடு கடைபிடிக்கப்படாத சந்தர்ப்பம் இடம் பெற்றுள்ளதா என்பதையும்,

(iv) அவ்வாறான சந்தர்ப்பம் நிகழ்ந்திருந்தால், அதற்காக உள்ள நிவாரனத்தையும்,

(v) சட்டத்தை மேலும் சிறந்த முறையில் கடைபிடிக்க ஊக்குவிக்குமுகமாக, சம்பந்தப்பட்டட எவரேனும் சட்ட அதிகாரிகளுக்கு உரிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதை உறுதிப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

0052/ ‘10

கௌரவ ராஜீவ விஜேசிங்ஹ,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகரால் (UNHCR) பொறுப்பளிக்கப்பட்டதும், 2010 ஏப்ரல் மாதத்தில் “கன்ட்றி ஒப் ஒறிஜின் றிசேர்ச் அன்ட் இன்போமேஷன்” (CORI) எனும் பெயர் கொண்ட அமைப்பொன்றினால் தயாரிக்கப்பட்டதுமான இலங்கை பற்றிய பிரதேச அறிக்கையொன்று பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு அவ்வாறான பிரதேச அறிக்கைகள் குறித்தும் அவை அவற்றிற்குப் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதையும் அறிவிக்கபடுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறைகளையும்,

(ii) ஈடுபடுத்தப்படும் ஆளணியினர் மற்றும் பயன்படுத்தப்படும் ஆராய்ச்சி முறையியல் ஆகிய விபரங்களுடன் எவ்வாறு CORI இப்பணிக்கெனத் தெரிவு செய்யப்பட்டது என்பது பற்றிய அறிக்கை ஒன்றை UNHCR இடமிருந்து அவரால் பெறமுடியுமா என்பதையும் மற்றும்,

(iii) இச்செயற்பாட்டின் செலவையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அறிக்கையில் தவறுகளேதுமிருப்பின் அவை திருத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுப்பாரா எனக் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0054/ ’10

கௌரவ அ. விநாயகமூர்த்த ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) வடமாகாணத்தின் ஏறக்குறைய 35 சதவீதமான பிரதேசத்தையுள்ளடக்கியுள்ள விலிகாமம் வடக்கு, உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பிரகடனம் எப்போது செய்யப்பட்டது என்பதையும்,

(ii) அத்தகைய பிரகடனம் இப்பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0108/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பிரமுக வங்கியில் பகணம் வைப்பிலிட்ட நபர்களின் பெயர்கள் யாவை என்பதையும்,

(ii) அவர்கள் வைப்பிலிட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அப்பணத்தினை மீளளித்தல் தொடர்பாக மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளும், நிதித் தொகையும் யாவை என்பதையும்,

(ii) இவ்வைப்பாளர்களுள் ரூபா ஒரு இலட்சம் வீதம் மீளக் கிடைக்கப் பெற்ற வைப்பாளர்களின் பெயர், முகவரி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 60 வயதுக்கு மேற்பட்ட வைப்பாளர்களுக்கு மீளளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு பணம் மீளளிப்புச் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(iii) ஒவ்வொரு வைப்பாளருக்கும் மீளளிப்புச் செய்யப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0111/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 முதல் 2010 மார்ச் 31 வரையிலான ஒவ்வோரு ஆண்டினதும் வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறை மில்லியன் ரூபாயில் தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியில் வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகை பற்றிய விபரத்தினை அவர் இச்சபையில் முன்வைப்பாரா?

(இ) (i) மேற்படி அக்கடன் தொகை ரூபாவில் எவ்வளவு என்பதையும்,

(ii) இக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்,

(iii) அதற்கேற்ப ஒவ்வொரு வருடத்திலும் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை ரூபாக்களில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0083/ '10

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) "கெமிதிரிய" மொத்த கருத்திட்டங்களுக்காக இதுவரை செலவு செய்யப்பட்ட மொத்த நிதி எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிதியில்,

(i) உத்தியோகத்தர் ஊதியங்களும் கொடுப்பனவுகளும்,

(ii) பயிற்சிப் பாடநெறிகளும் செயலமர்வுகளும்,

(iii) வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்கள்,

(iv) வாகனங்கள் கொள்வனவு, வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்

ஆகியவற்றுக்கு எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(ii) அக்கருத்திட்டங்களுக்காக இதுவரை செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0099/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2004 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு உரித்துடைமை பெற்றிருந்த சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) அவ்வாறு உரித்துடைமை பெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத்தொகை, அவர்களின் பெயர்கள், முகவரிகள் யாதென்பதையும்,

(iii) 2004, 2005, 2006, 2007 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறிய ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களாக இருந்து பின் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, பெயர்கள், முகவரிகள் யாவை என்பதையும்,

(ii) அவ்வாறு நீக்கப்பட்டது எந்த அடிப்படையின் கீழ் என்பதையும்,

(iii) புதிதாக இணைந்து கொண்ட சமுர்த்தி பெறுநர்கள் இருப்பார்களாயின் அவர்களுக்கு செலுத்தப்பட்ட பணத் தொகை, அவர்களின் முகவரிகள் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திகாமடுல்ல மாவட்டத்தின் அம்பாறை தேர்தல் தொகுதியில் தேசிய நீர் வழங்கல் சபையூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள,

(i) பிரதானமான குடிநீர் வழங்கல் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு நீர் வழங்கல் திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் எவையென்பதையும்,

(iii) அவற்றின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(iv) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் நீர் வழங்கப்பட்டது எத்திகதியிலிருந்து என்பதையும்,

(v) அந்த நீர் வழங்கல் திட்டத்தினூடாக குடிநீர் வழங்கப்படாத பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(vi) அவற்றிற்கு குடிநீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) அம்பாறை நகரிற்கு நீரை விநியோகிக்கும் நீர் தாங்கியின் திருத்த வேலைகள் முடிவடையும் வரை அம்பாறை நகரின் நீர் விநியோகம் தொடர்பில் தற்காலிகமாக எடுக்கும் நடவடிக்கைகள் எவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தி மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, பெப்ருவரி 24 ஆம் திகதிய 1642/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 2009 யூலை 17 ஆம் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முடிவுப்பொருட்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள், சுருட்டு, சிகரட்டு, பீடி மற்றும் குழாய்ப் புகையிலை என்பவற்றை களஞ்சியப்படுத்துதல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் தொடர்பாக பதில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்ட கட்டளை அந்த கட்டளைகளில் இல. 1 முதல் 19 வரையான பந்திகள் அதோடு தொடர்பான ஒழுங்கு விதிகளையும் அட்டவணையையும் பிரதியீடு செய்வதன் மூலம் 2009, ஒக்தோபர் மாதம் 26 ஆம் திகதிய 1625/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில்

வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் (அத்தியாயம் 52) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 1985 ஓகத்து 14 ஆம் திகதிய 362/6 ஏ ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 744 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மாற்றீடு செய்வதன் மூலம் 2010, பெப்ருவரி மாதம் 12 ஆம் திகதிய 1640/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இல. 912)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் 2009, திசெம்பர் 30 ஆம் திகதிய 1634/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகளின் பிரகாரம், அந்த கட்டளைகளின் அட்டவணையிலுள்ள திரவ பெற்றோலிய வாயுப் பொருட்களை நீக்கி ஆக்கப்பட்டு 2010, மார்ச்சு 01 ஆம் திகதிய 1643/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2009, மார்ச்சு 31 ஆம் திகதிய 1595 /14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் I, II, மற்றும் III ஆம் அட்டவணைகள் நீக்கப்பட்டு 2010, சனவரி மாதம் 01 ஆம் திகதிய 1634/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் சர்வதேச தொலைத்தொடர்பு இயக்குநர்கள் அறவீடு தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2005 மார்ச்சு 31 ஆம் திகதிய 1386/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் 9 ஆம் ஒழுங்குவிதியை நீக்கீ 2009, செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதிய 1620/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபார பண்ட இனங்கள் தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, பெப்ருவரி மாதம் 09 ஆம் திகதிய 1640/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபார பண்ட இனங்கள் தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2010, மார்ச்சு மாதம் 19 ஆம் திகதிய 1645/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2010, யூன் 08, செவ்வாய்க்கிழமை)

0104/ '10

கௌரவ அஜித் குமார,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லுனுகம்வெஹர நீர் வழங்கல் திட்டத்திலிருந்து குழாய் நீர் வழங்கபப்படும் மொத்த பாவனையாளர்களின் எண்ணிக்கை கிராம உத்தியோகத்தர் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்,

(ii) ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் குழாய் நீர் விநியோகிக் கப்படும் பொது இடங்கள் யாவையென்பதையும்,

(iii) நாளொன்றுக்கு மொத்தமாக எத்தனை லீற்றர் தண்ணீர் வினியோகிக்கப் படுகின்றதென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஆ) நாளொன்றுக்கு தொடர்ச்சியாக நீர் விநியோகத்தைப் பெறும் பாவனை யாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தொடர்ச்சியாக தண்ணீர் வினியோக்கிப்படாத, நேரசூசியொன்றின் பிரகாரம் தண்ணீர் வினியோகம் இடம்பெறும் முறையை, கட்டம் கட்டமாக ஒவ்வொரு தொகுதி அடிப்படையிலும் அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) இரு தினங்களுக்கொருமுறையேனும் தண்ணீர் கிடைக்காத பாவனையாளர் களுக்கு பவுசர் மூலம் தண்ணீரை வினியோகிக்க முடியாமைக்கான காரணத்தையும்,

(ii) தண்ணீர் இணைப்புக்களை ஏற்படுத்தியுள்ள போதிலும் தண்ணீர் கிடைக்காத பாவனையாளர்களின் எண்ணிக்கையினையும்,

(iii) வெஹரகல நீர்த்தேக்கத்திலிருந்து லுனுகம்வெஹரவுக்கு செலுத்தப்படும் தண்ணீரைப் பயன்படுத்தி தொடர்ச்சியான நீர் விநியோகமொன்றை ஏற்படுத்த முடியுமாவென்பதையும்,

(iv) அது எக்காலப்பகுதியிலென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0105/ '10

கௌரவ அஜித் குமார,—தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அம்பந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தபால் அலுவலகங்கள் மற்றும் உப, முகவர் மற்றும் கிராமிய என்ற வகையிலான தபால் அலுவலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவற்றில் கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகங்கள் யாவை என்பதையும்,

(iii) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் சேவை வழங்கப்படுகின்ற நிலப்பகுதியின் பரப்பளவு மற்றும் சனத்தொகை எவ்வளவென்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வோர் அலுவலகத்தினாலும் கடந்த 5 வருட காலப்பகுதிக்குள் ஆண்டுதோறும் ஈட்டியுள்ள அலகுகளின் அளவு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு தபால் அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்காகவும் உள்ள வலயங்களின் எண்ணிக்கை, உரிய தபாற்காரர்கள், தந்தி ஏவலாளர்களின் எண்ணிக்கை மற்றும் 2009.06.30 ஆந் தேதியன்று மேற்படி பதவிகளில் நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) வெற்றிடங்கள் எப்போதிலிருந்து நிலவுகின்றதென்பதையும்,

(iii) இறுதியாக வலயங்கள் எப்போது மறுசீரமைக்கப்பட்டனவென்பதையும்,

(iv) மேற்படி பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் தபால் வசதிகள் அளிக்கப்பட்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் கிராமங்களும் யாவையென்பதையும்,

(v) தபால் வசதிகள் எக்காலப்பகுதிக்குள் வழங்கப்படுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, யூன் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0018 / '10

கௌரவ ரவி கருணாநாயக்க, — நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு இறுதி வரை அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வீடுகளைப் பெற்றவர்களது பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(iii) அவ்வீடுகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டோரில் இதுவரை கடன் செலுத்த வேண்டியுள்ளோரின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(ii) இவர்கள் செலுத்த வேண்டியுள்ள கடன் நிலுவைத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0022 / '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வயது வந்தவர்களுக்கான திரைப்படங்களின் தற்போதைய நிலைமையை அதன் தற்போதைய சட்டநிலைமைகளுடனும்,

(ii) தணிக்கைச் சபை உறுப்பினர்கள் யார் என்பதையும்,

(iii) தணிக்கை செய்யப்பட்ட திரைப்படங்கள் அல்லது தொலைக்காட்சி நாடகங் களின் எண்ணிக்கையையும்,

(iv) இவை வெளிநாட்டு திரைப்படங்களுக்கும் வீடுகளுக்கான நேரடி ஒளிபரப்பு களுக்கும் (D.T.H) பொருந்துமா என்பதையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0090/ '10

கௌரவ அஜித் குமார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கையடக்க தொலைபேசிகளுக்காக சூழல் பாதுகாப்பு வரி விதிக்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், எப்போதிருந்து இந்த வரி அறவீடு ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்,

(iii) 2010 ஆம் ஆண்டில் இவ் வரியின் மூலம் எவ்வளவு தொகை அறவிட எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்,

(iv) அவ்வாறு வரி அறவிடப்பட்டிருப்பின் எவ்வளவு தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதையும்,

(v) வரிப் பணத்தில் எவ்வளவு தொகை கையடக்க தொலைப்பேசியினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பிலிருந்து பாதுகாக்க பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) கையடக்கத் தொலைபேசிகளுக்கு பயன்படுத்திவிட்டு நீக்கப்படுகின்ற பட்டரிகளில் எவ்வளவு எண்ணிக்கை சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவண்ணம் 2009 ஆம் ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0100/ '10

கௌரவ அஜித் குமார ,— சிறுவர் அபிவிருத்தி, பெண்கள் வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) மஹிந்த சிந்தனைக் கொள்கை பிரகடனத்தின் 8 ஆம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதற்கு அமைய பிறந்தது முதல் 5 வருடங்கள் வரையான குழந்தைகளுக்கு பால் கொள்வனவிற்காக மாதாந்தம் 200 ரூபா வீதம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்,

(ii) இதற்கமைய இந்த கொடுப்பனவு வழங்கப்பெற்ற குழந்தைகளின் எண்ணிக்கை மாவட்ட மட்டத்தில் எவ்வளவு என்பதையும்,

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட கொடுப்பனவை நாட்டிலுள்ள 5 வருடத்திற்கு குறைந்த அனைத்து குழந்தைகளுக்கும் வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0058/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 06 மாதங்களுக்கு முன்னர் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஓக்கேவெல பிரதேச செயலாளர் பிரிவின் மொரகந்தகொட கிராம உத்தியொகத்தர் பிரிவில் உள்ள மொரகந்தகொட பன்சல வீதி 100 மீற்றர் தொலைவுக்கு தார் கழன்று போக்கு வரத்து செய்ய முடியாத நிலைமைக்கு உள்ளாகியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்புப் பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமனங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0059/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 02 ஆண்டுகளுக்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மானஜ்ஜாவ கிராம உத்தியோகத்தர் பிரிவின் லயன் சந்தியிலிருந்து மானஜ்ஜாவ வரையிலான வீதியின் 01 கிலோ மீற்றர் தூரம் தற்போது கொங்ரீட் உடைந்து ஆங்காங்கே குன்றும் குழியுமாக பிரயாணம் செய்வதற்கு முடியாத நிலையிலிருப்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமனங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0060/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹராம அதிகாரப் பிரதேசத்துக்குட்பட்ட திஸ்ஸபுர கிராம உத்தியோகத்தர் பிரிவு, ரந்தனுவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் லுனுகம்வெஹெர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெலிகத்த, ரம்புக்வெல, கீர்த்திபுர ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காட்டு யானைகள் தொல்லை காரணமாக பயிர்கள், வீடுகள், உயிர்களுக்கு சேதங்கள் ஏற்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) ஏற்படும் பயிர்ச் சேதங்கள் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கையை கொண்டு நடாத்த முடியாத ஒரு நிலை தோன்றியுள்ளதை அவர் ஏற்றுக் கொள்கின்றாரா?

(இ) கடந்த காலங்களில் காட்டு யானைகளினால் உயிர்ச்சேதங்கள் இடம்பெற்றுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) வீடுகள், சொத்துக்கள் மற்றும் உயிர்ச்சேதங்கள் இடம்பெறுவது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(ii) இப்பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வாக, மின்வேலியொன்றை நிர்மாணிப்பதற்கும் மின்வேலியை நீண்ட காலத்துக்கு பராமரிப்பதற்குமான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0053/'10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாராளுமன்ற சட்டம் மூலம் கூட்டிணைக்கப்பட்டு சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(ii) கம்பனிகள் பதிவாளரிடம் பதிவு செய்து சமூக சேவைகள் அல்லது ஆய்வுப் பணிகள் அல்லது பரிந்துரைகளில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு கிடைக்கின்ற வெளிநாட்டு நிதிகளை கண்காணிப்பதற்கு தற்போதுள்ள பொறிமுறைகள் என்ன என்பதையும்,

(iii) அவ்விதமான கம்பனிகள் தேவைப்படுத்தப்பட்டவாறு தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றனவா. வரி தொடர்பான கோவைகளைப் பேணுகின்றனவா, அவற்றிற்கு கிடைக்கின்ற வருமானம் தொடர்பில் செலுத்த வேண்டியுள்ள வரிகளை செலுத்துகின்றனவா என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1999 முதல் 2010 வரையிலான காலப்பகுதியில் இனக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்திற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற நிதி எவ்வளவு என்பதையும், இந்நிதிகள் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அந்நிதிகளைப் பெற்றுக் கொண்ட நோக்கத்திற்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒப்புதல் அளித்ததா என்பதையும், மற்றும்

(iii) இந்நிதி பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக ஏதாவது அரசாங்க முகவரினால் கண்காணிக்கப்பட்டதா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0106/10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) எகலியகொட கல்வி வலயத்தில் 100 க்கும் குறைவான பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) அந்த ஒவ்வொரு பாடசாலையினதும் 2008, 2009 ஆம் ஆண்டுகளுக்கான சாதாரண தரப்பரீட்சை மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளையும்,

(iii) அப்பாடசலைகள் போதிய ஆசிரியர்களைக் கொண்டிருக்கின்றனவா என்பதையும்,

(iv) அத்தகைய பாடசாலைகளில் ஆசிரியர்கள் சமுகமளித்திராத போது மாணவர்களை பயனுள்ள வகையில் ஈடுபடுத்தி வைத்திருப்பதை உறுதிப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்

அவர் இச்சபைக்குத் தொரிவிப்பாரா?

(ஆ) எகலிகொட கல்வி வலயத்தில்,

(i) போதிய ஆசிரியர்களைக் கொண்டிராத பெரிய பாடசாலைகளின் எண்ணிக்கையையும்,

(ii) விஞ்ஞானம், அல்லது கணிதம் அல்லது ஆங்கிலத்திற்கு போதிய ஆசிரியர்களைக் கொண்டிராத பெரிய பாடசாலைகளின் எண்ணிக்கையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) கிராமிய மாணவர்களுக்கு போதிய ஆசிரியர்கள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் பாடசாலைகளதும், கற்பித்தல் ஆளணியினதும் நியாயபூர்வமான பங்கீட்டினை உறுதிப்படுத்த, மாகாண கல்வி அமைச்சுகளுக்கான வழிகாட்டுநெறிகளை வகுப்பாரா என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0055/ ‘10

கௌரவ அ. விநாயகமூர்த்தி,- பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(ஆ) (i) 1990 இல் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வலிகாகம் வடக்கிலிருந்து ஏறத்தாழ 100,000 பேர் இடம்பெயர்ந்தமையையும்,

(ii) அவர்கள் தங்களுடைய சொந்த வீடுகளுக்குச் சென்று மீளக் குடியேறுவதற்கு இற்றைவரை அனுமதிக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) அவர்கள் எப்போது சென்று தங்களுடைய சொந்த நிலங்களில் குடியேறுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பதை அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0112/ ’10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வடக்கு கிழக்கு யுத்தத்தின் பின்னர் தற்போது ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டள்ள அகதி முகாம்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்,

(ii) அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) எல்.ரீ.ரீ.ஈ. சந்தேச நபர்களாக கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) ஒவ்வொரு முகாமிலும் இருக்கும் சந்தேக நபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்தையும்,

(iii) அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் யாவையென்பதையும்,

(iv) அவர்களின் எதிர்கால நலனோம்புகையை முன்னிட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0114/ ’10

கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) திகாமடுல்ல மாவட்டத்தின் அம்பாறை தேர்தல் தொகுதியில்,

(i) தேசிய நீர் வழங்கல் சபையூடாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமூக குடிநீர் வழங்கல் திட்டங்கள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு நீர் வழங்கல் திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதிகள் எவையென்பதையும்,

(iii) அவற்றின் மூலம் குடிநீர் விநியோகிக்கப்படும் பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(iv) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் நீர் வழங்கப்பட்டது எத்திகதியிலிருந்து என்பதையும்,

(v) சமூக நீர் விநியோக கருத்திட்டங்களை வழங்கக்கூடிய பிரதேச செயலாளர் பிரிவுகள் எவை என்பதையும்,

(vi) அந்தக் கருத்திட்டங்களை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது எத்திகதியிலிருந்து என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0115/ '10

கௌரவ (திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) தெஹிஅத்த கண்டிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும்,

(i) வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) காணி அளிப்பு பத்திரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்தையும்,

(iii) தற்போது காணி அளிப்பு பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு, உத்தேச, கோப்புகள் தயாரிக்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி காணி அளிப்பு பத்திரங்களை வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்,

(ii) அப்பணிகளை துரிதப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2010, யூன் 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0027/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க – நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 15 வருடங்களுக்கான

(i) சந்தை விலைகளில் தனியார் நுகர்வினையும்,

(ii) பண்டங்கள் சேவைகளின் இறக்குமதியினையும்,

(iii) சந்தை விலைகளில் ஏற்றுமதியினையும்,

(iv) மொத்த உள்நாட்டு உற்பத்தியினை சந்தை விலைகளிலும் மாறாத விலைகளில் வெவ்வேறாகவும்,

(v) சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அல்லது மிகையினையும்,

(vi) பணவீக்கத்திற்கு முன்பும் பின்பும் வருடாந்த வளர்ச்சி விகிதத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

0028/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கடந்த 10 வருடங்களாக இலங்கை மத்திய வங்கி ஈட்டிய வருமானத்தையும்,

(ii) அரசாங்கத்தின் சார்பாக மத்திய வங்கியினால் வைக்கப்பட்டிருந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஒதுக்கீடுகளின் அளவையும்,

(iii) இந்த ஒதுக்கீடுகளினால் மத்திய வங்கிக்குக் கிடைத்த வருமானத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அரசாங்க நிதிகள் (நிதி அதிகாரம்) இல்லாமை காரணமக கடந்த 7 வருடங்களில் மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு கடனாக வழங்கப்பட்ட தொகையை ஒவ்வோர் ஆண்டும் யூன் 30 ஆம் திகதியன்று டிசம்பர் 31 ஆம் திகதியன்றும் உள்ளவாறு அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0029/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றை வரையான கடந்த 10 ஆண்டுகளுக்கான,

(i) நாட்டின் மொத்த தொழிற்படையையும்,

(ii) தனியார்த்துறை மற்றும் அரசாங்கத்துறை தொழிற்படைகளை தனித்தனியாகவும்,

(iii) அரசாங்கத்துறை தொழிற்பாட்டுப் பங்கேற்பை ஆயுதப் படையினர், பொலிஸ், துணைப்படைகள் மற்றும் ஏனைய பிரிவினர் என்ற முறையில் தனித்தனியாகவும்,

(iv) மேற்படி வினா (i) மற்றும் (ii) இன் பிரகாரம் நாட்டிற்கு ஏற்பட்ட மொத்த செலவையும் (மொத்த சம்பளம்)

வருடவாரியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (i) மற்றும் (அ) (ii) இன்படி ஓய்வூதியத்திற்கான மொத்த செலவை அடுத்த 15 ஆண்டுகளுக்கான மொத்த ஓய்வூதியத் தொகையுடனும்,

(ii) மேற்படி (அ) (iii) இன் பிரகாரம் அமய அல்லது நியமனம் உறுதிப்படுத்தப்படாத ஊழியர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0101/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தினுள் அந்தந்த ஆண்டுகளில் இலங்கையினுள் ,

(i) இயங்கி வந்த பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவிப் பாடசாலைகளின் எண்ணிக்கை மாவட்ட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) மூடப்பட்ட பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவிப் பாடசாலைகளின் எண்ணிக்கையினையும், தனித்தனியாக அவை எவையென்பதையும்,

(iii) ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் உதவிப்பாடசாலைகளின் எண்ணிக்கையினையும், தனித்தனியாக அவை எவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை இலங்கையினுள் பாடசாலைகள் மூடப்பட்டதற்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0061/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 03 ஆண்டுகளுக்கு முன்னர் கொங்ரீட் இட்டு செப்பனிடப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமஹராம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொன்வெலன கிராம உத்தியோகத்தர் பிரிவின் கங்கவெலன வீதியின் 200 மீற்றர் தூரம் தற்போது கொங்ரீட் உடைந்து பாவனைக்கு உதவாத நிலையிலிருப்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமனங் களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி வீதி நிர்மாணிப்பு தொடர்பாக முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0062/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் கொங்ரீட் இட்டு நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில் சூரியவெவ நகர கிராம உத்தியோகத்தர் பிரிவில் சூரியவெவ நகரம், முவன்பெலஸ்ஸ, வெவேகம வீதியில் 02 கிலோ மீற்றர் தற்போது கொங்ரீட் வெடிப்பு ஏற்பட்டு குழிகள் உருவாகி பயன்படுத்த முடியாத நிலைக்கு மாறியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப்ப பணிகளுக்காக நிதி விடுவிக்கும் போது உரிய நியமனங்களுக்கமைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளமைக்கான விதப்புரைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான பணக் கொடுப்பனவுகளின் போது வேறு எந்த நிறுவனங்களிடமிருந்து விதப்புரைகள் பெறப்பட்டுள்ளன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வீதியை நிர்மாணிப்பது பற்றி முறையான விசாரணையொன்றை நடத்துவதற்கும் அவ்வீதியை சீரான நிலைக்கு கொண்டுவருவதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0063/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின், பெத்தேவெவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள 250 ஆம் இலக்க வீதியில் பதலங்கலயிலிருந்து 1.5 கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற பொது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0107/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க, – புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) ஐ.நா வின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகரின் பணிப்புரையின்பேரில், "கண்ட்ரி ஒப் ஒரிஜின் ரிசேர்ச் அண்ட் இன்போமேசன்" எனும் நிறுவனத்தினால், 2010 ஏப்ரல் மாதத்தில் இலங்கை பற்றிய அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கைச் சிறைச்சாலைகள் பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் சரியானவையா என்பதையும்,

(ii) இலங்கைச் சிறைச்சாலைகளின் நிலைமைகளை முன்னேற்றுவதற்காக சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான எந்தவொரு அமைச்சினாலும் கடந்த இருபது வருடங்களாகத் தயாரிக்கப்பட்ட விதப்புரைகளையும்,

(iii) அத்தகைய விதப்புரைகள் அமுல்படுத்தப்பட்டனவா என்பதையும்,

(iv) இல்லையெனின், அத்தகைய எந்த விதப்புரைகளும் விரைவாக அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவர் நடவடிக்கை எடுப்பதோடு, அதுபற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவாரா என்பதையும்,

அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல் ஏன்?

# 2010, யூன் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0030/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்கு வரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பயணிகள் கார்கள், வேன்கள், லொறிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் முதலியவற்றின் மொத்த எண்ணிக்கையினையும்,

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவிலுமுள்ள வாகனங்களின் எண்ணிக்கையினை பின்வரும் வாகனப் பிரிவுகளில் அவை பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்தும்,

2 வருடங்களுக்குட்பட்டவை,

2 முதல் 5 வருடங்களுக்குட்பட்டவை,

5 முதல் 10 வருடங்களுக்குட்பட்டவை,

10 முதல் 20 வருடங்களுக்குட்பட்டவை மற்றும்

20 வருடங்களுக்கு மேற்பட்டவை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் மூலம் அரசாங்கம் அல்லது மாகாணசபைகள் ஈட்டும் மொத்த பணத்தொகையை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0031/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 10 வருடங்களில் உர மானியம் வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 04 வருடங்களில்,

(i) உரமானியம் வழங்கப்படும் கமத்தொழில் நோக்கங்கள்,

(ii) மாவட்டமொன்றிற்கு வழங்கப்பட்ட நன்மைகள் மற்றும் தொன்களிலான உரத்தின் அளவு,

(iii) மொத்த உரமும் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள்,

(iv) அரசாங்கத்தினாலா அல்லது தனியார் துறையினராலா அவை இறக்குமதி செய்யப்பட்டன மற்றும்

(v) பல்வேறு வகை உரங்களினதும் தொன் ஒன்றிற்கான செலவு மற்றும் மொத்தச் செலவு என்பவற்றையும்

வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(இ) தெங்கு, இறப்பர், தேயிலை மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கையாளருக்கு மேற்படி மானியம் வழங்காமைக்கான காரணங்களை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) அரசாங்கத்தால் வழங்கப்படுமாயின், மேற்படி பயிர் வகைகளுக்கென வழங்கப்படவுள்ள மாவட்டமொன்றிற்கான மானியம் எவ்வளவென அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0032/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) கடந்த 05 வருடங்களில் வீதிகள் அபிவிருத்திக்கும், பராமரிப்புக்குமென ஒதுக்கீடு செய்யப்பட்டு உண்மையில் செலவு செய்யப்பட்ட பணத்தொகையை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பராமரிக்கப்பட்டு வருகின்ற 10 முக்கிய வீதிகளையும், அவற்றிற்கென செலவு செய்யப்பட்ட பணத்தையும் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) நிர்மாணிக்கப்படவிருக்கும் நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பாக,

(i) பெயர்களையும்,

(ii) மதிப்பிடப்பட்டுள்ள செலவினங்களையும்,

(iii) தொடங்கும் திகதிகளையும் முடிவுறும் திகதிகளையும்,

(iv) ஒப்பந்தக்காரர்களது பெயர்களையும் அவர்கள் கூறிய விலைகளையும்,

(v) நிதியளிக்கும் மூலங்களையும் கடன்களுக்கான வட்டி வீதத்துடன் கூடிய மொத்த செலவினங்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0064/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 5 மாதங்களுக்கு முன்னர் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின், ஹக்பொருவ, அலியொழுஆர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அலியொழுஆர, நுகேயிலிருந்து ஹக்பொருவ வரையயுள்ள வீதியில் 1 கி.மீ. தூரம் வரை தார் கழன்று போக்கு வரத்துச் செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0065/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தெபொக்காவ தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வெலே லிந்த வீதியில் 100 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0066/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தெபொக்காவ வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கெரன்கொகுஆர வீதியில் 200 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2010, யூன் 22, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0033/'10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்றுள்ளவாறான நாட்டின் மொத்த கோதுமை நுகர்வையும்,

(ii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்படும் அளவு ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iii) கடந்த 20 வருடங்களில் நிலவும் கோதுமைக்கான சில்லறை விலைகளை வருடாந்த அடிப்படையிலும்,

(iv) நுகர்வோரின் சுமையைக் குறைப்பதற்கு கோதுமைக்கான மானியம் ஏதாவது வழங்கப்படுகிறதா என்பதையும்,

(v) அவ்வாறெனில், இற்றைவரை வழங்கப்பட்ட மானியத்தொகையையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்ளூரில் உ ற்பத்தி செய்யபட்ட கோதுமை, நுகர்வோரைச் சென்றடையும் வரை அதன்மீது இற்றை வரை விதிக்கப்பட்ட எல்லா வரிகளையும் அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0034/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இன்று வரை திறக்கப்பட்டுள்ள "லக் சதொச" வியாபார நிலையங்கள் எத்தனை என்பதையும்,

(ii) அதற்காக முதலிடப்பட்ட மூலதனம் எவ்வளவு என்பதையும்.

(iii) அதற்காக ஏதேனும் மூதலீடுகள் செய்யப்படாதவிடத்து, அவ்வாறான வியாபார நிலையங்களுக்குத் தேவையான இடங்கள் குத்தகை அல்லது பணம் கொடுத்து அல்லது கையேற்கப்பட்ட முறைமை மற்றும் அவற்றிற்காக பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட விதம் எவ்வாறு என்பதையும்,

(iv) இது வரையில் "லக் சதொச" இன் மொத்த புரழ்வு மாதாந்தம் என்னவென்பதையும்,

(v) இதுவரையில் அதன் மொத்த விற்பனைப் புரழ்வு, நிதிப் புரழ்வு மற்றும் தேறிய இலாபம் அல்லது நட்டம் என்னவென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) இவ்வனைத்து வியாபார நிலையங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் தொகை என்ன என்பதையும்,

(ii) ஊதியமாக கொடுக்கப்பட்ட மொத்த நிதியின் அளவு மற்றும் ஒரு தனி நபருக்கான சராசரி ஊதியம் என்னவென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) கடந்த 5 வருடங்களுக்கான வருடாந்த இலாபம் அல்லது நட்டம் என்னவென்பதையும் வருட ரீதியில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0035/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2010 ஏப்பிரல் 30 ஆம் திகதியிலுள்ளவாறு அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் (திறைசேரி உண்டியல்கள் உட்பட) தொகையினை வெவ்வேறாக அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005, 2006, 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் அரசாங்கத்தினால் பெறப்பட்டுள்ள மொத்தக் கடன்கள் (திறைசேரி உண்டியல்கள் உட்பட) எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திலும் அரசாங்கத்தினால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு கடன்களுக்காக வட்டியாகவும் தவணைக் கட்டணங்களாகவும் செலுத்தப்பட்டுள்ள தொகையினையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0067/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தலாவ கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தலாவ சந்தி, தம்பரெல்ல வீதியில் 1கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0068/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், கரகஹவல, பிங்கம, மெதஆர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கரகஹவல, மெதஆர, ஹிங்கார வீதியில் 5கி.மீ. தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0069/ '10

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இற்றைக்கு 8 மாதங்களுக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின், வதுகந்த கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கொலொன்கஹஹேன வீதியில் 300 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற பொது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## திகதி குறிப்பிடப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 36 / '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பாராளுமன்ற சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

பாராளுமன்றத்தின் சகல செயற்பரப்புகளிலும் பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை மேலும் வலுப்படுத்துவதற்காக விதந்துரைகள் செய்யப்படவுள்ளதால்,

பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

(அ) பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை மேலும் வலுப்படுத்துவது; மற்றும்

(ஆ) இதனோடு தொடர்புடைய குழு கருதுகின்றவாறான ஏனைய விடயங்கள்.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு ஐந்து (05) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) குழுவானது பின்வரும் தத்துவமுடையதாதல் வேண்டும்,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்திற் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் தற்போதுள்ளவர்களான அல்லது முன்னாள் ஆளணியினரை கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுநர்களின தும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுதல்; அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்.

(4) குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்திற் கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஐந்து (05) மாதங்களினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.